ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# SRI VAISHNAVAN.

# ஸ்ரீ வைஷ்ணவன்.

உண்மையறிவை உணர்த்தும்

## ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு"


| | | |
|---|---|---|
| தொகுதி 6. | 1106-ம் ௵<br>பிரஜோத்பத்தி௵ வைகாசி௴ | பகுதி 7. |


### நம்மாழ்வார் வணக்கம்

பங்கயப் பழனங்களென் றனகுற்றிடப்
பகலிராவென் றுமொருகால்
பைந்தொடி யராது போக நினைவுமொரு காலிலிப்
பார்முழுது மாள வொருகால்
சங்கைகளிலாமலே மானிடவர் பாற்கவிகள்
சாற்றிட நினைக்குமொரு கால்
சதுமறையை யுணர வொரு காலில் வேதாந்தமாய்ச்
சாரவு நினைக்குமொருகால்
மங்களமதாக விளையாட வொரு காற் பரம
வைதிக நினைவு மொருகால்
வகை தோறு மெண்ணி மனமருளு தென்னைய நின்
மலரடிக்காட் கொள்ளுவாய்
செங்கமலை மகிழ்மாலை யாகவே வந்திடச்
செய்வித்து மார்பமைத்துத்
திரைபொருவு பொருநை யிருகரை மருவு குருகை வரு
திருமருவு மகிழ்மாறனே.

ஸ்ரீ

# ஸ்ரீ வைஷ்ணவ தர்மம்.

வைராக்கியம். (முன் 100-ம் பக்கத்தொடர்ச்சி.)

இராமாநுசர்:— ஆசார்ய நியமனத்தைக் கடந்த அடியேனுக்கு நரகமே பலன். இதில் சந்தேகமில்லை.

நம்பிகள்:— இது தெரிந்திருந்தும் இப்படிச்செய்வானேன்?

இராமாநுசர்:— ஸ்வாமி! அடியேனது தாழ்மையான விண்ணப்பத்திற்கு திருச்செவி சாய்க்கவேண்டும். அடியேன் ஒருவன் நரகம் புகுவதைப்பற்றிக் கவலையில்லை. தேவரீர் திருவடிகளை முன்னிட்டு இத்திருமந்திரத்தைப் பகிரங்கமாய் வெளியிட்டால் ஆத்மகோடிகளெல்லாம் உஜ்ஜீவிப்பார்களென்றெண்ணியே இவ்விதம் செய்தேன். எல்லோரும் உஜ்ஜீவிப்பதே அடியேனுக்குப் பரமசந்தோஷம். இது மூலமாய் அடியேனுககு எத்தகைய கொடிய நரக வேதனை எற்பட்டாலும் அனுபவிக்கத் தயாராயிருக்கிறேன்.

இவ்வார்த்தைகளைக் கேள்வியுற்றதும் நம்பிகள் இராமாநுசரது உயர்வான மனோபாவத்திற்கு வியந்து பூரித்து இராமாநுசரைத்தழுவி யணைத்து வாரீர் இராமாநுசரே! உமது மனோபக்குவம் எமக்கும் கூடிற்றில்லை. நீர் சிறந்த ஞானச்செல்வர். கருணாநிதி. ஆளவந்தார் திருவுள்ளக்குறிப்பை நிறைவேற்றி வைப்பதற்கு நீரே அருகதையுடையவர் எனப்பலவாறு புகழ்ந்து கொண்டாடி அருகிலிருந்த முதலிகளை நோக்கி முதலிகாள்! இதுவரை இந்தத் தரிசனம் பரம வைதிக சித்தாந்த மெனப் பெயர் வகித்திருந்தது. இனி எம்பெருமானார் தரிசனம் எனப் பெயர் வகிக்கப்படல் வேண்டும். ஆதலால் இன்றுமுதல் எல்லோரும் இத்தர்ஸனத்தை எம்பெருமானார் தரிசனமென்றே அழைக்கக் கடவீர்கள் என அருளிச்செய்து இராமாநுசரை வாழ்த்தி விடை கொடுத்தனுப்பினார்.

இவ் ஐதிகத்தால் இராமாநுசரது பரோபகாரசிந்தையும் மனோவுறுதியும் வெளியாகிறது. இவர் பெரிய திருமந்திரத்தைப் பெறுகைக்காக எவ்வளவு கஷ்டப்பட்டாரென்பதும், கஷ்டமுறுந்தோறும் மனச்சலிப்பில்லாமல் வைராக்கியத்தோடு கருமத்திலேயே கண்ணாயிருந்தாரென்பதும், ஆகவே மக்கள் ஓர் பெருங் காரியத்தைக் கொண்டு முடிப்பதற்கு வைராக்கியம் வேண்டியது அவசியமென்பதும் தெளிவாகிறது.

(பா—ர்.)

# "இராமாநுசர் வைபவப்பத்து"

(விழுப்புரம் தாலூகா ஆரியூர் வ. பத்மநாப ராமாநுஜ தாஸன்)

திருவளர் செல்வர் திருவரங்கேசர்
திருவடி பரவிய மாறன்
இருகழல் சென்னி மன்னிய சீல!
இவ்வுல(கு) உய்ந்திட வந்த
பெருமைய னிராமன் இளவலாய் முன்பு
பிறந்தவ! கலியது கெடவே
குருவென இராமாநுச னென வந்த
கொற்றவ! நற்றவ முனியே! (1)

கடிபொழில் மதுராந்தக மதிலிருக்கக்
கண்டதும் பெரிய சீர்நம்பிக் (கு)
அடியவராய் துவய முணர்ந்தவரே!
அரங்கனால் திருவுள முவந்து
படியினி லுமக்கும் உம்முடையார்க்கும்
பகரிரு விபூதியு மீந்தோம்!
உடையவரே! என்றருள் செயப்பெற்ற
உத்தம! நற்றவ முனியே! (2)

திருமலை அப்பன் திருவுளம் மகிழச்
செம்பணி செய் பெரியாராம்
திருமலை நம்பிக் (கு) அடியவராகி
ஸ்ரீராமாயணப் பொருளைக்
கருத்துறக் கேட்டு வேங்கடவற்குக்
கனல் நிகர் ஆழியும சங்கும்
விருப்பமொ டளித்த இலக்குவ முனியே!
வினைகளைத் தீர்த்தருள்வாயே! (3)

அத்திமா மலையில் பேரருளாளர்க் (கு)
ஆலவட்டப்பணி புரியும்
சித்த முற்றவராய் உடனுரையாடும்
திருக்கச்சி நம்பியி னன்ப!
பத்தியொ டாராதனம அருளாளப்
பகவனை கொண்டிலங்கிய நல்
வித்தக! எதிகள் பற்பல ரேத்தும்
மெய்த்தவ! எம் எதிராசா! (4)

உம்பர் வந்திறைஞ்சும் உயர் திருக்கோட்டி
யூரினில் கோட்டியூர் நம்பி
அம்புய மங்கை அமர் திருமார்வ
னவன் திருமந்திர மோத
அம்புவி தன்னில் அனைவரும் உய்ய
அருளொடும் அதை வெளியிட்டு,
'எம்பெருமானாரே'! என நம்பி
இன்பொடு தழுவிட நின்றாய்! (5)

திருவரங்கத்தில் திகழ் பெருமாளாம்
சீரிய அரையர் பக்கலில், அக்
குருமனம் மகிழத் தொண்டுகள் பலவும்
குளிர் மனத்தொடு புரிந்து, அன்னார்
தருமுபதேசம் பற்பல அறிந்தும்
சரம பதார்த்த விசேடப்
பொருளை உணர்ந்தும் புவியை
உய்வித்த பூதிமாபுரி முனிவோனே! (6)

திருமலையாண்டான் பக்கலிலே தென்
திருக்குருகைப் பெருமான் செய்
திருவாய் மொழிக்கு நற்பொருள் கேட்டு
சீர்பொருள் பற்பல செப்பி
குரு ஆளவந்தார் இன் திருவுள்ளக்
குறிப்பினை விளக்கி நன்மாறன்
இருபாத மேத்தி பதின்மரைப் பரவி
இன்புறும் எம் இளையாழ்வீர்! (7)

நீடிய பொருள்கொள் சூத்திரந் தனக்கு
நிகரறு பேருரை செய்து
வாடிடும் அன்பர் ஐயமும் துயரும்
மையலும் விலகிட விளக்கி
நீடிய இமயம் தனி லெதிர்ப்பட்ட
நின் மலை கலைமகள் தன்னால்
"பாடியகாரரே!" என விளிக்கும்
பண்பினைப் பெற்ற மெய்த்தவனே! (8)

வில்லிப்புத்தூரில் வேயர்தங் குலத்தின்
விளக்கென வந்த நற்கோதை
சொல்லிய பனுவல் பொருள் பொதி
மனத்தால் தூயரே! நற்திருப்பாவை
வல்லராம் சீய வள்ளலே! சோலை
மலை அழகரை உகப்பித்து
நல்லியல் கோயில் அண்ணராகிய மெய்ஞ்
ஞானியர்க் கொரு பெரும் மணியே! (9)

இரு கரம் குவித்து நின்னை வேண்டிடுமிவ்
வெளியனேற் கருள் செய இன்று
திருவுளம் கொண்டு நன்மனத் தூய்மை
தீவினை யேற்கருள் செய்து
திரு அரங்கேசர் திருவடித் துணையும்
தேவரீர் திருவடித் துணையும்
மருவு நன் மனத்தை விரைவினி லெய்தி
மாண்புறச் செய்தருள்வீரே! (10)

---

# நம்மாழ்வார் உத்சவம்.

வைஷ்ணவ மதம் என்பது ஓர் பெரிய புனிதாலயம். இந்த மதத்தை ஸ்தாபனம் செய்தவர் சுவாமி நம்மாழ்வார். வைஷ்ணவ மதத்தின் விசேஷ விஷயங்களில் ஒன்று சரணாகதி. அதாவது இந்த் சம்ஸார அவஸ்தையில் இருந்துகொண்டு ஜனனம், கிழத் தனம், வியாதி, துக்கம், மரணம் முதலிய சகிக்கமுடியாத கஷ்டங் களை நாம் ஒவ்வொருவரும் இந்த உலகத்தில் அனுபவித்து வரு கிறோம். அப்படி அனுபவிக்கும் காலத்தில் பிரதிதினமும் நாம ஒவ்வொருவரும் ஏராளமான கர்மத்தைச் செய்து வருகிறோம். ஒவ் வொரு கர்மத்தின் பலனுக திரும்பத் திரும்ப ஜன்மம எடுக்கிறோம். அப்படி ஜன்மம் எடுக்குங்காலத்தில் திரும்பவும கர்மம் செய்கிறோம இப்படி சம்ஸாரத்தில் கிடந்து உழன்று கொண்டு வருகிற நமக்கு என்ன கதி? பிராயஸ் சித்தம் செய்து நம்முடைய பாபங்களைத்

*தீர்த்துக் கொள்ளலாமென்றாலும் அதற்கு நமக்கு சக்தியுமில்லை, பணமுமில்லை. செய்து வைக்க உபாத்தியாயரும் கிடையாது. அப்படியெல்லாம் ஒருக்கால் நமக்கு சௌகரியங்கள் இருந்தபோதிலும், நம்முடைய பாபமே நமக்குத் தெரியவில்லை. ஆனதால் பிராயஸ்சித்தம் செய்து கர்மத்தைத் தீர்க்கமுடியாது. பக்தி மார்க்கத்தால் மோக்ஷம் போகலாமென்றால் கர்ம யோகமாம், ஞான யோகமாம், பக்தி யோகமாம், பரபக்தியாம், பரமபக்தியாம், பரஞானமாம், பரம ஞானமாம் இவைகள் யாரால் முடியும்? இப்படி எந்த வழியாலும் சம்ஸாரத்தை ஒழிக்கமுடியாமல் திண்டாடுகிற நமக்கு ஸ்வாமி நம்மாழ்வார் அவதாரம் செய்து யாவரும் எந்த ஜாதியாரும் மிருகம், பக்ஷி முதலியது கூட வெகு சுலபமாய் ஒரு க்ஷணத்தில் எளிதில் அனுஷ்டித்து கடைத்தேறக்கூடியதாக* பிரபத்திமார்க்கம் *என்று ஒரு சுலபமான உபாயத்தை லோக உபகாரமாக வெளியிட்டு அதைத்தானே;*

*"அகலகில்லேனிறையு மென்றலர் மேல் மங்கையுறை மார்பா*
*நிகரில் புகழா யுலக மூன்றுடையா யென்னை யாள்வானே*
*நிகரி லமரர் முனிக்கணங்கள்-விரும்பும் திருவேங்கடத்தானே*
*புகலொன்றில்லா வடியேனின் னடிக்கீழமர்ந்து புகுந்தேனே."*

*என்கிற பாசுரத்தில் சொல்லியபடி தானே அனுஷ்டித்துக் காட்டி சம்ஸாரிகளைத் தேறப்பண்ணினார். இதுமட்டுமல்லாமல் அந்த உபாயத்தை அவர் தன் சிஷ்யனான நாதமுனிகளுக்கு உபதேசித்து அவரும் அதை தன் சிஷ்யனான உய்யக்கொண்டாருக்கு உபதேசித்து இவ்விதமாக அவ்வுபாயம் இப்போது நம்மளவும் வந்திருக்கிறது.*

*அப்பேர்ப்பட்ட மகானுடைய அவதாரம் திருக்குருகூர் என்று சொல்லப்படுகிற ஆழ்வார்திருநகரியில் அவருடைய திரு அவதார மகோத்ஸவம் இந்த வைகாசிமாதம் 8-ம்வ முதல் 17-ம்வ வரையில் நடந்து வந்து அவருடைய திருநக்ஷத்திரமான விசாக நக்ஷத்திரத்தன்று ஸ்வாமி தாம்பிரபரணியில் எழுந்தருளி தீர்த்தவாரி நடந்தது. இந்த மகோத்ஸவத்தில் ஐந்தாவது (5-வது) திருநாள் மிகவும் விசேஷமானது. இந்த பிரதேசத்திலுள்ள*

வைகுண்டாத விஜயாசன பூமிபால தேவேச பங்கஜவிலோசன சோர நாட்யான்!

நிக்ஷிப்தவித்த மகராயுத கர்ணபாம

ஸன்று சொல்லப்படுகிற எட்டுத்திருப்பதி எம்பெருமான்களும் அன்று காலையில் ஆழ்வார்திருநகரிக்கு எழுந்தருளி ஸ்வாமி நம்மாழ்வாருக்கு சேவை சாதிப்பதும், ஸ்வாமி ஆழ்வார் ஒவ்வொரு திருப்பதி எம்பெருமானுடைய பரிவட்டம், மாலை, அபயஹஸ்தம், திருத்துழாய் முதலிய பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு ஒவ்வொரு எம்பெருமானையும் பிரதக்ஷணம் செய்து எழுந்தருளுவதும், இது முடிந்த பிறகு ஆசார்யனே தெய்வம் என்று பிரபத்தி பண்ணியிருக்கிற ஸ்ரீ மதுரகவியாழ்வார் ஸ்வாமி நம்மாழ்வாரிடமிருந்து சகல பிரசாதங்களையும் பெற்றுக்கொண்டு அவரையே பிரதக்ஷணமாய் எழுந்தருளுவதும், இவ்வைஷ்ணவ சம்பிரதாயத்திற்கு ஓர் ஏற்றமான மகோத்ஸவம். அன்று இரவு நவதிருப்பதி எம்பெருமான்களும் கெருடாரூடர்களாய் ஸ்வாமி நம்மாழ்வாருக்கு சேவை சாதிப்பதும் ஸ்வாமி நம்மாழ்வாரும் ஹம்ஸ வாகனத்தில் எழுந்தருளுவதும் மிகவும் ஆச்சர்யமான சேவை.

இந்த மகோத்ஸவத்திற்கு இந்த ஜில்லாவிலிருந்து மட்டுமல்ல வேறு அநேக ஜில்லாக்களிலிருந்தும் அநேக வைஷ்ணவர்கள் விஜயம் கொண்டிருந்தார்கள். கூட்டம் ஏராளமாக இருந்தது. இவ்வாழ்வார் ஸ்ரீ வைஷ்ணவ சமூகத்திற்கு பிரதம ஆசார்யனா ஆனபடியால் இவ்வுத்ஸவத்தில் இப்போதைய பிரஸித்த வைஷ்ணவ ஆசார்யர்களான ஸ்ரீ அஹோபில மடம், ஸ்ரீ குறுங்குடி மடம், உள்ளூரிலுள்ள ஸ்ரீ பாஷ்யகாரர் மடம், ஸ்ரீ வானமாமலை மடம் இந்த மடங்களுக்கு அதிபதிகளான சந்நியாஸிகளுக்கு அநேக மரியாதைகள் ஏற்பட்டிருக்கின்றன.. இவர்களில் என்ன அசௌகரியத்தாலேயோ முதலாவதான ஸ்வாமியும் கடைசியான ஸ்வாமியும இந்த வருஷம எழுந்தருளவில்லை. அவர்களும் எழுந்தருளுகிறதாயிருந்தால் இன்னும் அவர்களுடைய சிஷ்யர்களும் ஏராளமாகக் கூடுவார்கள். ஊர் தாங்காது.

இப்பேர்ப்பட்ட உத்ஸவத்தில் கோவில் அதிகாரிகளும் மேலே கண்ட மடாதிபதிகளும் முக்கியமாக கவனிக்கவேண்டிய சில சங்கதிகள் அவ்விடத்தில் நடக்கிறதில்லை என்பது மிகவும வ்யஸனிக்கத்தக்கது. இந்த பத்துநாள் உத்ஸவத்திலாவது நல்ல வித்வான்களை வரவழைத்து ஸ்வாமி நம்மாழ்வாருடைய மதத்தை உபந்நியாசம் செய்யும்படி ஏற்பாடு செய்யவேண்டியது அவசியம். அந்தந்த மடா

திபதிகளுடைய விசேஷ மரியாதை தினங்களில் அவரவர்கள்செலவு செய்து பெரியோர்களை வருத்தி உபந்நியாஸங்கள் செய்தால் மிகவும் நன்றாயிருக்கும். இது வரையில் மேல்படி மடாதிபதிகள் விவகார விஷயமாக எவ்வளவோ திரவ்யம் செலவு செய்திருக்கிறார்கள், சொரூப ஞானத்தை உலகத்தாருக்குப் பரவச்செய்ய வேண்டியது அவர்கள் கடமையாயிருக்க அவர்கள் அதை உபேக்ஷை செய்யலாகாது.

ஆனால் இந்த வருஷம் நடந்த உத்ஸவத்தில் வைஷ்ணவர்கள் தனித்தனியே கூடிக்கூடி சம்ப்ரதாய விஷயமாக விசாரம் செய்வதும் தாஸ கோஷ்டிக்காரர்கள் வீதிகளைச் சுற்றி ஆழ்வாருடைய திவ்விய ப்ரபந்தங்களை இசையுடனும் தாளத்துடனும் பாடி ஆடி பஜனை செய்துவருவதும், ஸ்வாமி வீதி எழுந்தருளுங்காலங்களில் ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்தந்த மடாதிபதியை முன்னிட்டுக்கொண்டு இயல் கோஷ்டிகளில் ஆழ்வார்களுடைய திவ்விய பிரபந்தத்தை சேவித்துக்கொண்டு எழுந்தருளுவதும் பார்க்க ஆயிரம் கண்கள் தான் வேண்டும்.

இப்போர்ப்பட்ட வைஷ்ணவ சித்தாந்த ப்ரவர்த்தகரும் சாக்ஷாத் பகவதவதாரமும் வேதத்தையே தமிழ் செய்தவருமான இந்த மகானுடைய உத்ஸவத்தில் வேதபாராயணக் கோஷ்டியில்லை. கோவில் அதிகாரிகள் இதைப்பற்றி கொஞ்சமும் கவனிக்கவில்லையென்பது விசனிக்கத் தக்கது. பஜனை நடத்துவதற்காக ஏதோ ரூபாய்கொடுத்து பாடகர்களை வருத்தின அதிகாரிகள் வேத பாராயண கோஷ்டி நடத்தவேணுமென்று கொஞ்சங்கூடக் கவலைப்படவே யில்லை. ஆழ்வார் பஜனைக்கு ரூபாய் கொடுத்து பாடகர்கள் வருத்தவேணுமென்பது மிகவும் அனுவச்யமான செலவு. தாஸ கோஷ்டிக்காரர்கள் மிகவும் பக்தியுடன் ஒரு விதமான பிரதி பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் தங்கள் சொந்தச்செலவில் வந்து பத்துநாளும் பஜனை நடத்தி வருவது ரெம்ப நாளாக நடந்து வருகிறது.

இனியாவது கோவில் அதிகாரிகள் மேற்படி உத்ஸவத்தில் வேத பாராயணம் நடக்கும்படி ஏற்பாடு செய்வார்கள் என்று எதிர்பார்ப்பதுடன் மடாதிபதிகளும் தாங்கள் எழுந்தருளினாலும் எழுந்தருளாவிட்டாலும் அவரவர்கள் தினங்களில் வேதாந்த சாஸ்திர விஷயமாக உபந்நியாசங்கள் செய்யும்படி நல்ல வித்வான்களை அனுப்பிவைக்கும்படி ஸ்ரீவைஷ்ணவர்களால் எதிர்பார்க்கப்படுகிறது.

D. S. தாதாசாரியார், வக்கீல், ஸ்ரீவைகுண்டம்.

ஸ்ரீ

# இராமாயண ஸாராநுபவம்.

---

திருமாலினது பிறவியின் காரணமாக அவர் ஒப்பற்ற கடவுளல்லரெனவும், மனிதரைப்போல கன்ம வசப்பட்டவரெனவும் குறை கூறுவார் கூற்றை மறுத்து அவர் கூறுவதையே மறுமொழிக்கு ஆதாரவாகக் கொண்டு திருமால் அவதரிப்பதினாலேயே முழுமுதற் கடவுளாய் விளங்குகின்றனரென்பதை உயுத்தகாண்டம் நாகபாசப் படலத்தில் கருடனது திருவாயிலாக வெளியிடுகின்றனர். எங்ஙனமெனின் சுகரீவ அநுமசாம்பவந்தர் முதலிய வானரத் தலைவர்களும் சேனையும் இளைய வீரரும் இந்திரசித்தினது நாகபாசத்தால் கட்டுண்டு மூர்ச்சையடைந்த படுகளத்தில் ஸ்ரீ ராமபிரானும் அவர்கள் மீது தமக்குள்ள அன்பாகிய பாசத்தால் தாமும் பிணிப்புண்டு பரிதபித்துத் தளர, இது எத்தன்மையெய்தி முடியுங்கொலென்று இமையோர்கள் அஞ்சிக் கலங்க அத்தருணம் ஆகாயத்தில் வந்து தோன்றிய பெரிய திருவடி (கருடன்) ஸ்ரீராமபிரானை தோத்திரம் செய்யத்தொடங்குகிற முதலாவது கவியில் நான்காமடியில் உடையாய் வருந்தல் என்ற பதத்தால் இக்கருத்தைப் புலப்படுத்துகின்றனர். அஃதாவது உடையாய் வருந்தல் என்றதனால் உலகத்துயிர்களையெல்லாம் உடையவனே வருந்தாதே என்கிறார். உடையவனன்றோ உடைமையைத் தொடருவான். உடையவரல்லாதார் தொடருவதெங்ஙனம்? உடைமையாகிய உலகத்துயிர்கள் தான் பக்கடலில் முழுகி யலைவதைக்கண்டு ஸகியாதவனாய் பெருங்கருணை கொண்டு கிணற்றில் தவறி விழுந்த குழந்தையை எடுக்க அக்கிணற்றில் தாயும் குதிப்பது போல உயிர்கள் பிறந்திறந்து தடுமாறி அலைகின்ற கர்ம பூமியில் தானும் அவதரித்து

நாட்டில் பிறந்து படாதனபட்டு மனிசர்க்கா
நாட்டை நலியுமரக்கரை நாடித்தடிந்திட்டு

என்றபடி உயிர்களை ரக்ஷிப்பதின் காரணமாக அவர்களைத் தொடர்ந்து வந்து இப்படுகளத்தில் அன்பர்கள் மீது சாய்ந்தவண்ணமாக விளங்குகின்றனை யாதலின் உயிர்களை உடைய முழுமுதற்கடவுள் நீயாய்த் தோன்றுகின்றனை என்னும் அர்த்த விசேஷத்தை

உடையாய் வருந்தல் என்ற பதத்தால் விளக்கினர். இக்கவியைப் பின் வருமாறு காண்க.

வந்தான் மறைந்து பிரிவால் வருந்து மலர்மேல் அயன்றன் முதலோர்
தந்தாதை தாதை யிறைவா மறைந்து விளையாடுகின்ற தனியோய்,
சிந்தா குலங்கள் களைவாய் தளர்ந்து துயர் கூறலென்ன செயலோ
எந்தாய் வருந்தல் உடையாய் வருந்தல் என வின்ன பன்னிமொழிவான்

(இதன் பொருள்:-) வந்தான் மறைந்து - மறைந்து வந்தான் - சுவாமி மனிதனாக மறைந்து வந்ததனால் பிறர்க்குத் தெரியாமல் தானும்(கருடனும்)மறைந்து வந்தான் என்றபடி, (மலர்மேலயன்றன் முதலோர் தந்தாதை தாதை யிறைவா) அன்பர்களதுபிரிவால் வருந்துகின்றவனுயினும் ப்ரும்மனுக்கு மேலான நித்யர்களுக்கும் அவர்களுக்கும் மேலான சேனைத்தலைவருக்கும் மேலான சுவாமியன்றோ, நீ என்றான் ஆகில் இவ்வளவு மகிமையினை யுடையவர் ராவணாதிகளாகிற புல்லர்களை சங்கரிக்க இவ்வளவு ப்ரயாஸத்தோடு தளர்ந்தால் இவரை முழுமுதற் கடவுளென்பதெங்ஙனம் என்பர் ஒரு சாரார். அதனை மறுப்பாராக (மறைந்து விளையாடுகின்ற தனியோய்) என்கிறார் அஃதாவது இதெல்லாம் திருவிளையாட்டின் செயல்களேயொழிய நினைத்தால் அவர்க்கரியதொன்றுமில்லையென்றபடி இதற்குதாஹரணங்கள் நாரணன் விளையாட்டெல்லாம் நாரதன் முனிவன் கூற எனவும் இறப்பதே பிறப்பதேயெனும் விளையாட்டினிது கந்தோய் எனவும்

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கே சரணங்களே.

எனவும் இவரது ராமாயணத்தில் கூறப்படுகின்றது. மூன்றும் அடியின் கருத்து-மற்றையோர் உன்னால் துயரந்தீரவேண்டியிருக்க நீ தளர்வது என்ன செயலோ-நான்காமடியின் கருத்து என்து சுவாமியே வருந்தாதே உலகங்கட்கெல்லாம் சுவாமியே வருந்தாதே என்றிவ்வாறு துதிக்கலாயினன். இப்பாசுரமும்மெண்ணத்தக்கன. அதாவது

துறந்தாயு மொத்தி துறவாயுமொத்தி சுடர் நேமியங்கையுடையாய்
மறந்தாயு மொத்தி மறவாயு மொத்தி மயலாலும் யாமுமறியேம்
பிறந்தாயு மொத்தி பிறவாயு மொத்தி பிறவாமைனக்கு பெரியோய்
அறந்தா நிறுத்தவரி தாசயாரிவ்வதிரேக மாயை யறிவார்

ஆக இதுவரை அவதாரம் செய்வதினால் கடவுளுக்கு உயர்ச்சியொழியத் தாழ்ச்சி இல்லையெனக் கூறப்பட்டன. இனி அவதாரத்தின் அம்சங்களைப்பற்றிச் சிறிதாராய்வோம். திருமாலினது தசாவதாரங்களுள் பரசுராம பலராமாவதாரங்கள் ஸ்வரூபாவேசாவதாரங்கள். மற்றும் மத்ஸ்ய கூர்மவராஹ நரஸிம்ம வாமந தசரதராம கிருஷ்ண கல்கி யவதாரங்கள் ஸாக்ஷாதவதாரங்கள் (நேரில்தானே யவதரித்தல்) ஆவேசந்தான் ஸ்வரூபாவேசமெனவும் சக்தியாவேசமெனவும் இருவகைப்படும். இதில் ஸ்வரூப ஆவேசமாவது ஈசுவரன் சேதநர்களிடம் தன் ஸ்வரூபத்துடன் ஆவேசித்து நிற்றல்.

சக்தி ஆவேசமாவது உலக நன்மையின் காரியம் நிறைவேறுமளவும் ஈசுவரன் தனது சக்தியை சேதநரிடம் ஆவேசிப்பித்தல். கார்த்தவீர் யார்ஜுநன், அர்ஜுநன், வ்யாஸர்முதலாயோர் இவ்வாவேசமுடையோர். இவற்றில சக்தி ஆவேசத்திலும் ஸ்வரூபாவேசம சிறந்தது. இதினும் ஸாக்ஷாதவதாரம் மிகச்சிறந்தது. எங்ஙனமெனின் சக்தியாவேசமான கார்த்த வீரியனை ஸ்வரூபாவேசமான பரசுராமன் வென்றது. அப்பரசுராமனை ஸாக்ஷாதவதாரமான தசரதராமன் வென்றதுமான சரிதங்களால் விளங்கும். பின்வருமாறு—

ஆயிரந் தோளாற் றின்னைநான்கு காமும்பற்றி
வாய்வழி குருதி சோரக்குத் திவான் சிறையில் வைத்த
தூயவன் வயிரத்தோள்கள் துணித்தவன் தொலைந்தமாற்றம்
நீ யறிந்திலையோ வேகுநெறி யறிந்திலாத நீசா

எனப்பிராட்டியார் ராவணனுக்குக் கூறுகின்றாள்.

## திரு அவதாரம்.

(அகார்ய சிந்தா ஸமகாலமேவ ப்ராதுர்பவம் சாபதர:புரஸ்தாத்) என்றபடி கார்த்தவீர் யார்ஜுநன் அவனது நாட்டில் யாரும் அக்ரமச்செயலைச் செய்ய நினைக்கும்பொழுதே அவர் முன் கையும் வில்லுமாகத் தோன்றி நின்று அநீதியை ஒழித்தரசாண்டனன் எனப் புராணங்கள் கூறும். கோசல நாட்டுக்கிறையாகிய தசரதமன்னவன் நாட்டைப் பரிபாலித்ததை நம் கவி மன்னவர் கூறுவதாவது.—

குன்றென வுயரிய குவ்வுதோளினன்
வென்றியந் திகிரி வெம்பரிதி யாமென
ஒன்றென வுலகிடை யுலாவி மீமிசை
நின்று நின்றுயிர் தொறும் கெடிது காக்குமே.

இதனால் அக்கிரமச் செயலை நினைப்பவரே நாட்டில் கிடையா தெனவும் அங்ஙனம் உளராயினும் கார்த்த வீரியன் போல வில்லுங் கையுமாய் அவர் முன் தோன்ற வேண்டாதபடி இவரது ஆக்ஞாசக்ரமே கதிரவனுக்கு நிகராக எங்கும் பரவி துன்ப விருளை நீக்கிக்காத்தன என்றபடி

வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசியர்
உள்ளமு மொரு வழியோட நின்றவன்
தள்ளரும் பெரும்புகழ் தயரதப்பெயர் மன்னவன்
வய்யகமுழுவதும் வறிஞனேஒப்புமோர்
செய்யெனக் காத்தினி தரசுசெய்யும் நாள்

நெடுங்காலமாக மகப்பேறிலாமை வருந்தி குருவாகிய வசிஷ்டரிடம் குறையை விக்ஞாபிக்க அவரும் ராவணாதிகள் பீடையால் நொந்த பிரமன் முதல் தேவர்கள் திருப்பாற்கடலை யடைந்து கூப்பிட அப்பரமன் தோன்றி அஞ்சலஞ்சலென அபயமளித்து

மசரதமனையவர் வாழும் வாழ்வுமோர்
நிசரத கணைகளால் நீறு செய்ய யாம்
கசரத துரகமாக்கடல் கொள் காவலன்
தசரதன் மதலையாய் வருதும் தாரணி

என அபயமளித்த ரகசியத்தை யோகத்ருஷ்டியால் உணர்ந்து அரசனை நோக்கி கலைக்கோட்டு முனிவனை வரவழைத்து மகம் செய்யில் மகப்பேறடைவை யென நிகழ்த்த அக்கணமே முனிவர் யழைத்து வந்து வேள்வியை நடத்தலாயினன். கலைக்கோட்டு முனிவனை எத்தகையரெனின்

புத்தான கொடுவினையோடருந்துயரம் போயொளிப்பப் புவனத்தாக்கும்
வைத்தானகுணமுடையடத்தானபாதன் புத்திரன்ரோமபாதன்புரக்தளிக்கும்

திருநாட்டில் நெடுங்கால மளவதாக-மின்னி யெழுமுகில்பொழியாதொழிய வெள்ளப்பொருக் கொழிந்து வெந்துயரம் பெருகுதலும் அறிஞர்கள் கலைக்கோட்டு முனிவரின் வான்பிலிற்று மென்றார். உடன் பொது மகளிரது சூழ்ச்சியால் முனிவர் தருவிக்கப்பட்டனர்.

வனாகர் முனிவரன் வருமுன் வானவன்
சனமர் கடுவெனக்கருகி வான்மிசை
சளசள வென மழைத்தாரை கான்றன
குளனொடு நதிகள் தம் குறைகள் தீரவே

இதை அரசனார்ந்து முனிவரை எதிர்கொண்டு வணங்கி என்னே முனிவரின் மகிமை! என்னே தவத்தின் பெருமை! என்னே மழை பொழிந்த வியப்பு! கற்பரசிகளான உத்தமிகள் பெய்யெனப் பெய்யு மழை, இப்புண்ணியர் பாதந்தீண்டப் பாருலகம் பாக்கியம் படைத்ததம்மா எனக்கொண்டாடினன். இத்தகைய முனிவரால் தசரதன் நடத்தப்பெறும் யாகசாலையில் அவிர்ப்பாகம் கொள்ள ப்ருமன் முதல் அமரர் குழாங்கள் குழுமியிருந்தனர். அவர்கள் திருமால் தமக்கு முன் கொடுத்த வரத்துக்குக் காலம் ஸமீபித்து விட்டபடியால் அதை நிறைவேற்றக்கருதி திருமாலை அவிடம் ப்ரஸந்நமாகும்படி தோத்திரம் செய்யலாயினர். அத்தருணம் ஸ்ரீமந்நாராயணன் சதுர் புஜனாய் சங்க சக்ர கிரீட மகரகுண்டல ஆரகே யூர நூபுரபீதாம்பரதாரியாய் மார்பில் 'பிரியா மங்கையுடனும்' நீலமணி மேனி நிழலெழுந்து ஒளிவீசத் தோன்றினன். அப்பொழுது அமரர்கள் ஆனந்த பரவசராய் மறுபடியும் தங்குறையைக் கூற அப்பெருமானும் இந்த தசரதன் யக்ஞத்தில் நாம் நான்கு அம்சங்களாக ப்ரவேசிக்கிறோம். எனத்திருவாய் மலர்ந்து மறைந்தனன். பகவானது அம்சங்களில் இலட்சுமண பரதசத்ருக்னர்களின் அம்சங்களாகிய சேஷ சங்க சக்ரங்களின் அம்சங்களும் கலந்துள்ளன வெனக்கருத வேண்டும்; ராமய்யங்கார், ஆழிகுடி:

---

## ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தின் சிறப்பு

(முன் 73-ம் பக்கத்தொடர்ச்சி.)

### திருக்கை, திருமுடி, முதலானவைகளின் பரத்துவமும் அவைகளின் சௌலப்யமும்.

(சென்னை, P. சக்கரவர்த்தி அய்யங்கார் எழுதுவது.)

சம்சாரமென்னும், சாகரத்தில் பிறந்து முக்தி என்கிற கரை சேருவதற்கு தக்க வைகுந்த னென்பதோர் தோணி பெறாது உழல்கின்ற நம்போன்ற மானிடர்களுக்கு இக்கலியுகத்தில் செய்

யவேண்டிய கர்மங்கள், யாகம், தவம், யக்யம் முதலானவைகளல்ல. அவைகளை அனுஷ்டிக்கவும் இக்காலத்தில் முடியாது. ஆனால் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் க்ஷேத்ரங்களையும் அவனுடைய திருநாமங்களையும் சதா காலம் மனத்தினால் சிந்தித்து வாயினால்பாடி காயத்தினால் அவனுக்கு நித்திய கைங்கர்யம் செய்து கொண்டிருப்பதே போதுமானது. இது பற்றியே பேயாழ்வாரும் மூன்றாம் திருவந்தாதியில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"பொருப்பிடையே நின்றும் புனல் குளித்தும் ஐந்து
நெருப்பிடையே நிற்கவும் நீர் வேண்டா—விருப்புடை
வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர் தூய்க்கை தொழுதால்
அஃகாவே தீவினைகளாய்ந்து.

அர்ச்சாவதாரத்தில் திருக்கோலம் கொண்டு எழுந்தருளியிரா நின்ற விக்ரக சொரூபியாகிய எம்பெருமானை பக்தியுடன் சேவிக்கும் ஒவ்வொருவருக்கும் இரும்பைக்கண்ட காந்தம்போலும், அழலிலிட்ட மெழுகுபோலும் உருகுகின்றது என்றால், பரமபதத்தில் வீற்றிருக்கும் சர்வேஸ்வரனை கண்ணாரக்கண்டு களிக்கும் காதல் வாய்த்த நித்தர்களும் முக்தர்களும் என்ன பாக்கியம் செய்தார்களோ! இந்த லீலா விபூதியில் அவதரித்த திருப்பாணாழ்வார் ரங்கனை கண்டு பக்தி பரவசமாய் அவனுடைய அவயவாதி சௌந்தரியங்களை கண்டு திருப்பாதம் முதல் திருமுடிவரையில் கண்குளிர சேவித்து அதனால் "அமலனாதி பிரான்" என்ற பாசுரத்தினால் தன்னுடைய உள்ளன்பை வெளியிட்டு கடைசியில் "என்ன முதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினை காணாவே" என்று முடித்தார். அவ்விதம் சர்வமங்கள சொரூபியாகிய எம்பெருமானுடைய திருவடிகளின் மாகாத்மியத்தையும் அவைகளின் சௌலப்ய குணத்தையும் பற்றி முன் சஞ்சிகையில் விவரித்தோம். இந்த அத்தியாயத்தில் அவனுடைய மற்ற அவயவங்களின் சிறப்பை வர்ணிப்போம்.

## திருக்கைகளின் குணானுபவம்.

அப்ராகிருதமாய் எம்பெருமானுடைய சங்கல்ப விசேஷத்தினால் உண்டான ஸ்ரீவைகுண்டத்தில் பரமபத நாதனாக விளங்கும் சர்வேஸ்வரன தன் ஆஸ்ரிதர்களை பார்த்து சர்வ லோகங்களுக்கும் புகலிடம், தானே என்றும் பிரளய காலத்தில் சகல ஜீவராசிகளும்

அடையவேண்டிய வஸ்து தன்னுடைய திருவடியே என்றும் காண்பித்தல் பொருட்டும், சரணாகத வத்சலன் தானே என்றும் அறியும்படியாய் அபயப் பிரதானமாக தன திருக்கைகளை சேவை சாதித்துக்கொண்டிருக்கிறான். அந்த திருக்கைகள் தான் எம்பெருமான் கண்ணனாக அவதரித்து கோகுலத்தில் திருவிளையாடல்கள் புரிந்தபொழுது, பசுக்கன்றுகளையும், ஆடுமாடுகளையும் பிடித்து, தடவிக்கொடுத்து அவைகளை தாமபினால்கொண்டு, தோழத்தில் கட்டியும் இத்யாதி குணசேஷ்டிதங்களை புரிந்தன. எவனுடைய திருக்கைகள் ஆதிகாலத்தில் தேவர்களும், அசுரர்களும் அமிர்தமந்தன காலத்தில மந்தரத்தை மத்தாக நாட்டி, வாசுகியை வடகயிராகவும், திருப்பாற்கடலை கடையும் பொழுது தங்களுடைய சக்தியானது வர வர குறைந்து, மேலும் கடைய முடியாமல் வருந்த, அவர்களிடையே அவர்களுக்குத் தெரியாமல் நின்று தன்னுடைய ஆயிரந்தோளால் கடைந்தானோ அப்பேர்ப்பட்ட திருக்கைகள் தான் இவ்வவதாரத்தில் வீடு வீடாகப் புகுந்து வெண்ணெயின் பொருட்டும், பாலின் பொருட்டும் இடைச்சியர்களிடத்தில் யாசகம் செய்து நின்றன. பிரம்ம கபாலத்தை கையிலேந்திய முக்கண்ணனுடைய சாபம் நீங்கும்பொருட்டு எவனொருவன் பத்ரி நாராயணனாக தன்னுடைய கைகளினால பிரம்ம கபாலத்தை நிறைத்தானோ அச்சர்வேஸ்வரன் இடைச்சியர்களிடத்தில் கையேந்தி நின்ற குணத்தை என்னென்று சொல்லி புகல்வது! எவனுடைய திருக்கைகள், முன் ராமனாக அவதரித்த பொழுது, ஒரே பாணத்தினால் ராவணனுடைய பத்து சிரசுகளையும் பனங்கனி போல உதிர அடித்து அவனை தன் சகுடும்பபந்துவர்க்கங்களுடன் விண்ணுலகேற்றியதோ அந்தத் திருக்கைகள் இந்த அவதாரத்தில் அர்ச்சுனன் தேர் தட்டில் சாரதியாயிருந்தகாலத்தில், குதிரைகளின் கடிவாளங்களை பிடித்து தேரோட்டின.

## திருமுடி முதலிய மற்ற அவயவங்களின் விசேஷம்.

எவனுடைய திருமுடியின் பேரில், வைகுண்டத்தில [illegible] சாமவேத பாராயணத்தினால், சப்த சமுத்திர ஜலத்தினால் திருமஞ்சனம் கண்டருளப் பண்ணுகிறார்களோ அந்த திருமுடியானது இவ்வவதாரத்தில் தன்னுடைய ஆசாரியர் பொருட்டு காட்டில்வெட்டிய விறகுகளைத் தூக்கிச் சென்றன. எவனுடைய திருவயிற்றில் இந்த சப்த லோகங்களும், சகல ஜீவராசிகளும் வைத்துக் காப்பாற்

றப்படுகிறதோ அந்த திருவயிற்றில், யசோதை பிராட்டி வெண்ணை திருடினதற்காக தாம்புகொண்டு கட்டி, உரலோடு சேர்த்து பிணைத்தது எம்பெருமானுடைய சௌலப்ய குணத்தை வெகு தெளிவாக காட்டுகிறது அல்லவா., இதையே நம்மாழ்வார் திருவாய்மொழியில் மூன்றாம்பத்தில் முதல் பாட்டில்

*பத்துடைய அடியவர்க் கெளியவன் பிறர்களுக்கரிய*
*வித்தகன் மலர்மகள் விரும்பும் நமரும் பெறலடிகள்*
*மத்துறு கடை வெண்ணை களவினில் உரவிடையாப்*
*புண்டு எத்திறம் உரலினோடு இணைந்திருந் தேங்கிய எளிவே."*

என்றபடி அதனால் எம்பெருமானுடைய சௌலப்பிய குணத்தை கண்டு மனமுருகி அதனால் வியாமோகமிட்டு ஆறுமாத காலம் தன்னறிவு இல்லாமல் கிடந்தார் என்று சொல்லுவர். இவ்விதமாக சர்வேஸ்வரன் தான் எவ்வளவு பெரியவனாக இருந்தபோதிலும் பக்தியுடையவர்களுக்கு மிகவும் சுலபமாக கட்டுப்பட்டவன் என்பதையும் அப்படி தன்னை பக்தியினால் கட்டுப்படுத்துகின்றவர்களுக்கு தான் சகலவித கைங்கரியங்களையும் தானே செய்து காட்டுபவன் என்பதையும் இந்த கிருஷ்ணாவதாரத்தில் நன்றாககாட்டியருளினார். அப்பேர்ப்பட்ட எம்பெருமானுடைய சரித்திரத்தை தினந்தோறும் கேட்டும் அனுபவிப்பதே, ஒவ்வொரு மனிதர்க்கும் கடமையாகும். அடுத்த சஞ்சிகையில் கண்ணனது திருவிளையாடல்களில் முக்கியமான "வேய்குழல் ஊதல்" என்பதைப்பற்றி ஆராய்வோம்:

---

## கீதா வாக்கியங்கள்.

அர்ச்சுனா! இந்தப் பிரகிருதிக்குச் சிறப்பு கிடையாது. இதைக் காட்டிலும் வேறாயதும் மேலானதுமான பிரகிருதி என் ஜீவ சொரூபமாயிருக்கிறது. அந்தப் பிரகிருதியே இப்பிரபஞ்சத்தைத் தரித்திருக்கின்றது. (அத்தி 7. சுலோ 5.)

... ... ...

இவ்விருவகைப் பிரகிருதிகளாலேயே எல்லா பூதங்களும் உண்டாகின்றன. யானே அவ்விரண்டு பிரகிருதிகளுக்கும் காரணனாகவிருந்துகொண்டு எல்லா ஜகத்தையும் ஆக்குதற்கும் அழித்தற்கும் காரணமாக யிருக்கிறேன். (அத்தி. 7. சுலோ 5.)